(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT JUDGE , MADURAI.

S.C .No. 323/17

**DEPOSITION OF PW 8 WITNESS FOR PROSECUTION / DEFENCE**

Name : சுடலைமுத்து

Father's name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 15.12.2017

மு வி ---

நான் தற்போது விசுவாசபுரி 2 ம் தெருவில் குடியிருக்கிறேன். நான் அழகேந்திரா ஆட்டோ மொபைல்ஸ்சில் மேலாளராக பணி புரிகிறேன். சாட்சி சுப்ரமணி எங்கள் உரிமையாளர் வீட்டில் வாட்சுமேனாக இருக்கிறார். 28.2.17 அன்று 1.35 லிருந்து 1.45 மணிக்குள் எங்கள் நிறுவன உரிமையாளர் வீட்டில் பதிவான வீடியோ ரிக்கார்டை பதிவிறக்கம் செய்து தரும்படி போலிசார் கேட்டதாக என் உரிமையாளர் சொன்னார். நான் எங்கள் நிறுவனர் வீட்டிற்கு சென்று பதிவான பகுதிகளை டிவிடியில் பதிவிறக்கம் செய்து போலிசாரிடம் கொடுத்தேன்.

அந்த டிவிடிவி  தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது.  அது சா பொ 4.  அதை போலிசார் படிவம் 95 ல் என்னிடம் கையெழுத்து பெற்று கொண்டனர்.  அந்த கையெழுத்து அசாஆ 9.

கு வி -- அனைத்து எதிரிகள் தரப்பில்

நான் அழகேந்திரா ஆட்டோஸ்சில் வேலை பார்க்கிறேன்.  எங்கள் அலுவலகம் சேதுபதி பள்ளிகூடம் அருகில் உள்ளது.   எங்கள் நிறுவன உரிமையாளர் வீட்டிற்கும் சேதுபதி பள்ளிகூடத்திற்கும் இடையில் 4 முதல் 5 கி மீ தூரமிருக்கும்.   எங்கள் உரிமையாளர் பெயர் முருகேசன்.   நான் தாக்கல் செய்த சா பொ 4 நானாக தயாரித்தது என்றால் தவறு.  பதிவு செய்த கேமரா மற்றும் Hardisk ஆகியவை என் நிறுவன உரிமையாளருக்கு சொந்தம்.  Hardisk ல் பதிவு செய்ததை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு.  Hardisk ஐ நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை.  நான் சொன்னது போல்  அவ்வாறு  Hardisk எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.  நான் தாக்கல் செய்துள்ள சிடி உரு மாற்றம் செய்யப்பட்ட விவரங்கள் அடங்கியது என்றால் சரியல்ல.  என்னுடைய நிறுவன உரிமையாளரிடம் சொல்லி  அனுமதி பெற்று அவ்வாறு பதிவிறக்கம் செய்யவில்லை என்றால் சரியல்ல.  நான் போலிசாருக்கு ஆதரவு வேண்டும் என்பதற்காக  பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.   என்னை போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை.   நான் சொன்ன படி சொன்ன தேதியில்

போலிசாரிடம் நான் எந்த பொருளும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

(சா பொ 4 ல் உள்ள 3 பைல்களில்( ch2.avi, ch5.avi & ch13.avi) உள்ள ஒலி படங்கள் ஆஜர் எதிரி ராஜேஷ்சிடம் நீதிபதியின் Laptop ல் போட்டு காண்பிக்கப்பட்டது). ( முதலில் தான் சென்றதாகவும் ஆனால் சாவி வாங்க செல்லவில்லை என்றும் , பின்பு அதிலுள்ள ஒலிபடத்திலுள்ள நபர் தான் இல்லை என்று கூறுகிறார்).

ம வி ---

இல்லை.